1971 டிசம்பர் 6]

ings for their offices. They should be in a position to take quick decisions. The whole department has to be streamlined, something like income-tax department, where things take place quickly with out any tears on the part of the persons who are assessees?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விற்பனை வரிக் குழு ஒன்று நியமித்ததற்குப் பிறகு இவைகளைப் பற்றியெல்லாம் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்காமல், துன்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்க அதிகாரிகள் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

கட்டடங்கள் இல்லை என்று சொன்னார்கள். கட்டடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கட்டடம் கட்டி முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஒரு கட்டடம் கட்ட இருக்கிறார்கள். சென்னையில் கூட விற்பனை வரி அலுவலகத்திற்காகத் தனியான கட்டடம் கட்ட அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

புதிய தொழில்கள் துவக்கம்

* 109 வினா—திரு. கே. எ. வகாப் : } மாண்புமிகு தொழில்
திரு. கே. டி. கே. தங்கமணி : }
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்ற ஆகஸ்டு மாதத்தில் தமிழக தொழில் அமைச்சர் வெளிநாடுகளுக்கு சென்றதின் பலனாக என்னென்ன புதிய தொழில்கள் தமிழ்நாட்டில் துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் இரசாயன மற்றும் இயந்திரத் தொழில்களுக்கு தொழில் நுட்ப உடனுழைப்பு தருவதற்கு அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பியா நாடுகளில் உள்ள பல நிறுவனங்கள் இசைந்துள்ளன. இதனைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட துறைத் தலைமையினரும் தொழிற்கழகங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : தமிழ் நாட்டில் வெளிநாடுகளின் உதவியோடு அல்லது ஒத்துழைப்போடு ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்தத் தொழிற்சாலைகள் இது வரையில் தமிழ் நாட்டில் இல்லாத தொழிற்சாலைகள் ஏதாவது இருக்கின்றனவா ? அவற்றின் மூலம் அன்னியச் செலாவணி எந்த அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிதாக வருகிற தொழிற்சாலைகளைப் பற்றித்தான் குறிப்பிட்டேன். அன்னியச் செலாவணி பற்றி மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் ஹங்கேரி போன்ற சோஷலிஸ நாடுகளுக்கு, இன்னும் பல முன்னேற்றகரமான நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அங்கே அவர்கள் பார்த்த சில விஷயங்களையும்-நம் தமிழ்நாட்டிற்கு எந்த முறையில் பொதுத்துறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்பது போன்ற விஷயங்கள் பற்றி ஓர் அறிக்கையை இந்தச் சபைக்கு சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமாக கேள்விகளுக்கு பதில் சொல்ல வாய்ப்பு இக்கிற காரணத்தினால் ஓர் அறிக்கை தேவை இல்லை. ஹங்கேரியில் அந்த நாட்டு தொழில் அமைச்சர் அவர்களுடன் விவாதிக்கப்பட்டது. ரசாயனத் தொழிற்சாலை, குறிப்பாக மருந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கு நம் தமிழ்நாட்டில் வந்து ஆராய்ச்சி செய்து அவற்றைத் தொடங்குவதற்கு விருப்பத்தை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 16 கேள்விகள் இருக்கின்றன. ஆனால் கேள்வி நேரம் இன்னும் எட்டு நிமிடங்கள்தான் இருக்கிறது. இவ்விதம் துணைக்கேள்விகள் கேட்கத் தொடங்கினால் இன்னும் இரண்டு மணி நேரம் கேள்வி நேரத்திற்காக நீட்டிக்க வேண்டிவரும். எனவே, முக்கியமான கேள்விகளுக்கு துணைக் கேள்விகள் கேட்பது என்ற முறையை அனுசரித்து மூலக் கேள்வி கேட்டவர்களுக்கு மட்டும் ஒன்றிரண்டு துணைக் கேள்விகள் என்ற முறையில் நாம் வேகமாகச் செல்லலாம் என்று கருதுகிறேன்.

* 110 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்கள் தொடங்க லைசென்ஸ் முறைகளை ரத்து செய்ய வேண்டி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கு இந்த லைசென்ஸிங் முறை பல நேரங்களில் இடையூறாக இருப்பதாக கருதப்படுவதால் அதை நீக்குவதற்காகவாவது அல்லது அதிலுள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவாவது இனி மேலாவது நமது அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முழுவதும் ரத்து செய்ய வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவேதான் இல்லை என்று சொன்னேன். நமது அரசு தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக மத்திய அரசு ஒரு புதிய கொள்